**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.10/2017**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மகேஷ் குமார் | மதம் | : இந்து |
| த/பெ | : கௌதம் சாந்த் | ஜாதி | : -- |
| வயது | : 45 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் : | நகை கடை | வட்டம் | : திருத்தணி |

**10.02.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1,2, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் புல எண்.301/7 ஆகும். நான் சொல்லியுள்ள புல எண் தவறு என்றால் சரியான புல எண்தான். வழக்கு சொத்தை நான் 1998ல் வாங்கினேன் என்றாலும் இதுவரை வழக்கு சொத்து காலிமனையாகதான் உள்ளது என்றாலும் இடம் கட்டுவதற்காகதான் சென்றோம். அதனால்தான் இந்த வழக்கு வந்தது. எப்போது கட்டிடம் கட்ட போனோம் என்றால் சரியாக தெரியவில்லை. வழக்கு சொத்து என் அனுபவத்திலேயே இல்லை என்றாலும் அதனால்தான் நான் எந்த தேதியில் கட்டிடம் கட்ட போனேன் என்பதை என்னால் சொல்ல முடியவில்லை என்றாலும் சரியல்ல. கட்டுவதற்காகதான் சென்றோம். அதனால்தான் இந்த வழக்கு வந்தது.

2. வழக்கு சொத்து குறித்து என்னுடையது என்று நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் கேட்டுள்ளேன். நான் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும்தான் கேட்டுள்ளேன் என்றாலும் எனக்கு உரிமையில்லை என்பதால்தான் நான் விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 3 வரைபடத்தில் தயாளன் பெயரில் கொடுக்கப்பட்ட வரைபட அனுமதி என்றால் ஆமாம். வரைபட அனுமதியில் கட்டிடம் கட்ட 18.07.1995 முதல் 17.07.1998 வரை உரிமம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தயாளனது உரிம காலம் முடிந்துவிட்டது என்றால் ஆமாம்.

3. 21.01.1998ல்தான் நான் சொத்து வாங்கினேன் என்றால் சரிதான். 21.01.1998க்கு பின்பு வரைபட அனுமதியை என் பெயருக்கு பெறவில்லை என்றால் சரிதான். 1998ம் ஆண்டு நான் சொல்லும் வழக்கு சொத்து பொது பாதையாக

பயன்படுத்தப்பட்டு வந்தது என்றால் சரியல்ல. அது பொது பாதையாக பயன்படுத்தப்பட்டு வந்ததால்தான் என்னால் அதன் பிறகு என் பெயருக்கு கட்டிட வரைபட அனுமதி பெற முடியவில்லை என்றால் சரியல்ல. என் சொந்த இடத்தில் யாருக்கும் சென்றுவர எந்த உரிமையும் இல்லை. எனது இடத்தில் பிரச்சனை வந்த பின்பு எனது உரிமையை இந்த நீதிமன்றத்தில் கேட்கவேண்டும் என்றால் அதற்குதான் இந்த வழக்கு.

4. வழக்கு சொத்தை பொறுத்தவரை உரிமையை கேட்காமல் உறுத்துக்கட்டளை மற்றும் கேட்டுள்ளது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 7 என்ன என்றால் என் இடத்தின் லேஅவுட் ஆகும். வா.சா.ஆ 7ல் எனது இடம் என்ன மனை எண்ணாக காட்டப்பட்டுள்ளது என்றால் மனை எண்.1 என குறிப்பிட்டுள்ளது எனது மனையாகும். வா.சா.ஆ 7 நாங்களாக தயார் செய்து கொண்டது என்றாலும் அதில் எந்த வரைபட அனுமதியும் பெறவில்லை என்றாலும் நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் வரைபட அனுமதி கொடுக்கவில்லை. நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் வரைபட அனுமதி கொடுக்கவில்லை என்ற தகவலை என் வழக்கில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

5. நான் இந்த வழக்கில் சொல்லியுள்ள சுலோச்சனா, கிருஷ்ணவேணி மீது ஏற்கனவே இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.15/2020 வழக்கு நடந்தது என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 6 அதற்கான தீர்ப்புரை என்றால் ஆமாம். வா.சா.ஆ 6 வழக்கு நடந்து முடிந்த பின்பு மீண்டும் சுலோச்சனா, கிருஷ்ணவேணி மீது இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். எனவே இந்த வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலை படித்து பார்த்தேனா என்றால் தெரிந்து கொண்டேன். அந்த எதிர்வழக்குரையில் வழக்கு சொத்து பொது வழி என கூறியுள்ளதில் நான் நீதிமன்ற ஆணையர் மூலம் வழக்கு சொத்தை பார்வையிட்டு அது பொது வழி இல்லை என்பதை காண்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டுள்ளார்.

6. அ.வ.எண்.3/2020 எண்ணில் உள்ள வழக்கு சொத்து எண்ணும் இந்த வழக்கில் வழக்கு சொத்து புல எண்ணும் வெவ்வேறு என்றாலும் வழக்கு சொத்தை நான் அனுபவிக்கவே இல்லை என்றாலும் எனவே தான் எனக்கு வழக்கு சொத்து விவரமே தெரியவில்லை என்றாலும் சரியல்ல. எனவே இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 8

அறிவிப்பை நகராட்சி ஆணையர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நகராட்சியில் கொடுத்த ஒப்புகையை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ 8 நான் வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 9 நகராட்சி ஆணையர் அனுப்பிய அறிவிப்பு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 9 அறிவிப்பை எனது அதிகார பலத்தை வைத்து நானாக தயார் செய்தது என்றால் இல்லை. எனது வழக்கிற்காக வேண்டி புல எண்.301/7ல் 8X60 அளவில் சிமெண்ட் கான்கிரிட் அகற்றப்பட்டதாக கொடுக்கப்பட்டுள்ள விவரம் எனது அதிகார பலத்தை வைத்து நானாக தயார் செய்தது என்றால் இல்லை. 8X60 அளவு போக மீதி 12X60 அளவிற்கு சிமெண்ட் கான்கிரிட் உள்ளது என்றால் இல்லை. வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் நான் எந்த காலத்திலும் வழக்கு சொத்தை அனுபவிக்கவேயில்லை என்றாலும் வழக்கு சொத்து இன்றுவரை பொது வழியாகதான் உள்ளது என்றாலும் இல்லை.

8. வழக்கு சொத்திற்கு பின்புறம் தனியார் பள்ளி உள்ளது என்றால் சரிதான். அந்த தனியார் பள்ளிக்கு பள்ளி குழந்தைகளை வாகனத்தில் ஏற்றி செல்வார்கள் என்றால் பள்ளி வாகனத்தில் அழைத்து செல்வார்கள். அந்த பள்ளி வாகனம் வழக்கு சொத்து வழியாகதான் செல்லும் என்றால் இல்லை. நான் 1998ல் இருந்து வழக்கு தாக்கல் செய்யும் வரையும் இந்த வழக்கு சொத்தை அனுபவிக்கவேயில்லை என்றாலும் வழக்கு சொத்து இன்றுவரை பொது வழியாகதான் உள்ளது என்றாலும் இல்லை. பொது வழியை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டி நீதிமன்றத்தில் பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்து பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

9. வழக்கு சொத்தில் உரிமை விளம்புகை கேட்காமல் உறுத்துக்கட்டளை மட்டும் கேட்டு தாக்கல் செய்துள்ளது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என் வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)